**OS.No**. 181/2015

**PW** 1- மனோஜ் த/பெ. ராஜேந்திர குமார்

நாள். 06.09.2024

3 ம் பிரதிவாதி தரப்பில் சாட்சி மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

**1.** தற்போது என்னிடம் காட்டப்படும் 10.6.2019 ம் தேதியிட்ட தான சொட்ல்மென்ட் பத்திரம் என் அப்பா எனக்கு ஆதரவாக எழுதிவைக்கப்பட்டது என்றால் ஆமாம். மேற்படி ஆவணம் **பி.வா.சா.ஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டதுஎன்றால் என் அப்பா மற்றும் அம்மாவிற்கு பாத்தியப்பட்டது. மேற்படி சொத்தானது வேலம்பாளையத்தில் உள்ள சொத்து தாவா சொத்து அல்ல. மேற்படி ஆவணம் பதிவு செய்த நாளில் சொத்தின் மூல ஆவணங்கள் தொழைந்து போயிவிட்டதாக தினசரி நாளிதழில் அறிவிப்பு கொடுக்கப்பட்டு காவல் நிலையத்தில் ஆவணங்களை கண்டுபிடிக்க இயயவில்லை என சான்றிதழ் பெற்றப்பட்டது என்றால் ஆமாம். அதன் அடிப்படையில் தான் ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ளதுஎ ன்றால் ஆமாம். மேற்படி பி.வா.சா.ஆ 1 ற்கு உண்டான அசல் ஆவணங்கள் அனைத்தும் என் பெற்றோர்கள்3 ம் பிரதிவாதி வசம் ஒப்படைத்திருந்தார் என்றால் இல்லை. என் பெற்றோர்கள் மேற்படி 3 ம்பிரதிவாதியிடம் 1996 ம் ஆண்டில் ரூ.18 லட்சம் கடன் வாங்கியிருந்தார்கள் என்றும் அதற்கு ஆதரவாக தான் மேற்படி ஆவணங்களை ஒப்படைத்திருந்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி 3 ம் பிரதிவாதி திருப்பூர் மாநகர காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு அதன் பேரில் போலீசார் என்னையும் விசாரித்தார்கள் என்றால் ஆமாம்.

2. 1996 லேயே 3 ம் பிரதிவாதியிடமிருந்து ரூ.18 லட்சம் கடன் பெற்றுக்கொண்டு அவரிடம் அசல் ஆவணங்களையும் என் பெற்றோர்கள் ஒப்படைத்து அப்போதே தாவா சொத்தில் 3 ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட

ஆவணங்களை ஒத்துக்கொண்டு தாவா சொத்தில் பங்கு எதுவும் கேட்ப்பதில்லை என்று உறுதி அளித்தார்கள் என்றும் அதை மீறி நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி இரு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

S RAMACHANDRAN

Digitally signed by S RAMACHANDRAN
Date: 2024.09.06 18:52:36 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.